ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ கோயில் திருமொழி ॥

(தென்கலை ஸம்ப்ரதாயம்)

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

## பொருள் அடக்கம்


| | | |
|---|---|---|
| **1** | பெரிய திருமொழித் தனியன்கள் ............... . . . . . . . . . | **2** |
| **2** | வாடினேன் ............................ . . . . . . . . . . . . . . . . | **4** |
| **3** | தாயே தந்தை ........................... . . . . . . . . . . . . . . . | **8** |
| **4** | விற்பெருவிழவும் ........................ . . . . . . . . . . . . . . | **12** |
| **5** | அன்றாயர் ............................. . . . . . . . . . . . . . . . . . | **16** |
| **6** | திவளும் ............................... . . . . . . . . . . . . . . . . . | **20** |
| **7** | தூவிரிய ............................... . . . . . . . . . . . . . . . . . | **24** |
| **8** | நும்மைத் தொழுதோம் ...................... . . . . . . . . . . . . | **28** |
| **9** | ஏழை ஏதலன் ........................... . . . . . . . . . . . . . . . | **32** |
| **10** | பெடையடர்த்த .......................... . . . . . . . . . . . . . . . | **36** |
| **11** | கண்சோர .............................. . . . . . . . . . . . . . . . . . | **40** |
| **12** | தெள்ளியீர் ............................ . . . . . . . . . . . . . . . . | **44** |
| **13** | மூவரில் ............................... . . . . . . . . . . . . . . . . . | **48** |
| **14** | காதில் கடிப்பு ........................... . . . . . . . . . . . . . . . | **52** |
| **15** | மாற்றமுள ............................. . . . . . . . . . . . . . . . . . | **56** |

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# பெரிய திருமொழித் தனியன்கள்

## தனியன்கள்

கலயாமி கலித்$_4$வம்ஸம் கவிம் லோகதி$_3$வாகரம் ।
யஸ்ய கோ$_3$பி$_4$: ப்ரகாஶாபி$_4$ராவித்$_3$யம் நிஹதம் தம: ॥

வாழி பரகாலன் வாழி கலிகன்றி ⋆
வாழி குறையலூர் வாழ் வேந்தன் ⋆
வாழியரோ மாயோனை வாள் வலியால் மந்திரம் கொள் ⋆
மங்கையர் கோன் தூயோன் சுடர் மான வேல்

நெஞ்சுக்கிருள் கடி தீபம் அடங்கா நெடும் பிறவி ⋆
நஞ்சுக்கு நல்ல அமுதம் தமிழ் நன்னூல் துறைகள் ⋆
அஞ்சுக் கிலக்கியம் ஆரண சாரம் ⋆
பரசமயப் பஞ்சுக் கனலின் பொறி ⋆
பரகாலன் பனுவல்களே

எங்கள் கதியே ! இராமானுச முனியே ! ⋆
சங்கை கெடுத்தாண்ட தவராசா ⋆
பொங்கு புகழ் மங்கையர் கோன் ஈந்த மறை ஆயிரம் அனைத்தும் ⋆
தங்கு மனம் நீ எனக்குத் தா

மாலைத் தனியே வழி பறிக்க வேணும் என்று ⋆
கோலிப் பதிவிருந்த கொற்றவனே ⋆
வேலை அணைத்தருளும் கையால் அடியேன் வினையைத் ⋆
துணித்தருள வேணும் துணிந்து

## பெரிய திருமொழித் தனியன்கள் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 1.1 – வாடினேன்

‡ வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால் ⋆
பெருந்துயர் இடும்பையில் பிறந்து ⋆
கூடினேன் கூடி இளையவர் தம்மோடு ⋆
அவர் தரும் கலவியே கருதி ⋆
ஓடினேன் ஓடி உய்வதோர் பொருளால் ⋆
உணர்வெனும் பெரும் பதம் தெரிந்து ⋆
நாடினேன் நாடி நான் கண்டு கொண்டேன் ⋆
நாராயணா என்னும் நாமம் ‖ **1.1.1** ‖ 1

‡ ஆவியே ! அமுதே ! என நினைந்துருகி ⋆
அவர் அவர் பணை முலை துணையாப் ⋆
பாவியேன் உணராதெத்தனை பகலும் ⋆
பழுது போய் ஒழிந்தன நாள்கள் ⋆
தூவி சேர் அன்னம் துணையொடும் புணரும் ⋆
சூழ் புனல் குடந்தையே தொழுது ⋆
என் நாவினால் உய்ய நான் கண்டு கொண்டேன் ⋆
நாராயணா என்னும் நாமம் ‖ **1.1.2** ‖ 2

சேமமே வேண்டித் தீவினை பெருக்கித் ⋆
தெரிவைமார் உருவமே மருவி ⋆
ஊமனார் கண்ட கனவிலும் பழுதாய் ⋆
ஒழிந்தன கழிந்த அந்நாள்கள் ⋆
காமனார் தாதை நம்முடை அடிகள் ⋆

தம் அடைந்தார் மனத்திருப்பார் ⋆
நாமம் நான் உய்ய நான் கண்டு கொண்டேன் ⋆
நாராயணா என்னும் நாமம் ‖ **1.1.3** ‖ 3

வென்றியே வேண்டி வீழ் பொருட்கிரங்கி ⋆
வேற்கணார் கலவியே கருதி ⋆
நின்றவா நில்லா நெஞ்சினை உடையேன் ⋆
என் செய்கேன் நெடு விசும்பணவும் ⋆
பன்றியாய் அன்று பாரகம் கீண்ட ⋆
பாழியான் ஆழியான் அருளே ⋆
நன்று நான் உய்ய நான் கண்டு கொண்டேன் ⋆
நாராயணா என்னும் நாமம் ‖ **1.1.4** ‖ 4

கள்வனேன் ஆனேன் படிறு செய்திருப்பேன் ⋆
கண்டவா திரி தந்தேன் ஏலும் ⋆
தெள்ளியேன் ஆனேன் செல் கதிக்கமைந்தேன் ⋆
சிக்கெனத் திருவருள் பெற்றேன் ⋆
உள் எலாம் உருகிக் குரல் தழுத்தொழிந்தேன் ⋆
உடம்பெலாம் கண்ண நீர் சோர ⋆
நள் இருள் அளவும் பகலும் நான் அழைப்பன் ⋆
நாராயணா என்னும் நாமம் ‖ **1.1.5** ‖ 5

‡ எம் பிரான் எந்தை என்னுடைச் சுற்றம் ⋆
எனக்கரசென்னுடை வாணாள் ⋆
அம்பினால் அரக்கர் வெருக்கொள நெருக்கி ⋆
அவர் உயிர் செகுத்த எம் அண்ணல் ⋆
வம்புலாம் சோலை மா மதிள் ⋆
தஞ்சை மாமணிக் கோயிலே வணங்கி ⋆

நம்பிகாள் ! உய்ய நான் கண்டு கொண்டேன் ⋆
நாராயணா என்னும் நாமம் ‖ **1.1.6** ‖ 6

இற்பிறப்பறியீர் இவர் அவர் என்னீர் ⋆
இன்னதோர் தன்மை என்றுணரீர் ⋆
கற்பகம் புலவர் களைகண் என்றுலகில் ⋆
கண்டவா தொண்டரைப் பாடும் ⋆
சொற்பொருள் ஆளீர் சொல்லுகேன் வம்மின் ⋆
சூழ் புனல் குடந்தையே தொழுமின் ⋆
நற்பொருள் காண்மின் பாடி நீர் உய்மின் ⋆
நாராயணா என்னும் நாமம் ‖ **1.1.7** ‖ 7

கற்றிலேன் கலைகள் ஐம் புலன் கருதும் ⋆
கருத்துளே திருத்தினேன் மனத்தை ⋆
பெற்றிலேன் அதனால் பேதையேன் நன்மை ⋆
பெரு நிலத்தார் உயிர்க்கெல்லாம் ⋆
செற்றமே வேண்டித் திரி தருவேன் தவிர்ந்தேன் ⋆
செல் கதிக்குய்யும் ஆறெண்ணி ⋆
நற்றுணை ஆகப் பற்றினேன் அடியேன் ⋆
நாராயணா என்னும் நாமம் ‖ **1.1.8** ‖ 8

‡ குலம் தரும் செல்வம் தந்திடும் ⋆
அடியார் படு துயர் ஆயின எல்லாம் ⋆
நிலந் தரம் செய்யும் நீள் விசும்பருளும் ⋆
அருளொடு பெரு நிலம் அளிக்கும் ⋆
வலம் தரும் மற்றும் தந்திடும் ⋆
பெற்ற தாயினும் ஆயின செய்யும் ⋆

நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் ⋆
நாராயணா என்னும் நாமம் ‖ **1.1.9** ‖ 9

‡ மஞ்சுலாம் சோலை வண்டறை மாநீர் ⋆
மங்கையார் வாள் கலிகன்றி ⋆
செஞ்சொலால் எடுத்த தெய்வ நன் மாலை ⋆
இவை கொண்டு சிக்கெனத் தொண்டீர் ! ⋆
துஞ்சும் போதழைமின் துயர் வரில் நினைமின் ⋆
துயர் இலீர் சொல்லிலும் நன்றாம் ⋆
நஞ்சு தான் கண்டீர் நம்முடை வினைக்கு ⋆
நாராயணா என்னும் நாமம் ‖ **1.1.10** ‖ 10

அடிவரவு — வாடினேன் ஆவியே சேமம் வென்றி கள்வனேன் எம்பிரான் இற்பிறப்பு கற்றிலேன் குலம் மஞ்சு வாலி

வாடினேன் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 1.9 – தாயே தந்தை

‡ தாயே தந்தை என்றும் ⋆
தாரமே கிளை மக்கள் என்றும் ⋆
நோயே பட்டொழிந்தேன் ⋆
உன்னைக் காண்பதோர் ஆசையினால் ⋆
வேயேய் பூம் பொழில் சூழ் ⋆
விரையார் திருவேங்கடவா ! ⋆
நாயேன் வந்தடைந்தேன் ⋆
நல்கி ஆள் என்னைக் கொண்டருளே ॥ **1.9.1** ॥ 11

மானேய் கண் மடவார் ⋆
மயக்கில் பட்டு ⋆
மா நிலத்து நானே நானாவித ⋆
நரகம் புகும் பாவம் செய்தேன் ⋆
தேனேய் பூம் பொழில் சூழ் ⋆
திருவேங்கட மாமலை ⋆
என் ஆனாய் வந்தடைந்தேன் ⋆
அடியேனை ஆட் கொண்டருளே ॥ **1.9.2** ॥ 12

கொன்றேன் பல் உயிரைக் ⋆
குறிக்கோள் ஒன்றிலாமையினால் ⋆
என்றேனும் இரந்தார்க்கு ⋆
இனிதாக உரைத்தறியேன் ⋆
குன்றேய் மேகம் அதிர் ⋆

குளிர் மா மலை வேங்கடவா ! ⋆
அன்றே வந்தடைந்தேன் ⋆
அடியேனை ஆட் கொண்டருளே ॥ **1.9.3** ॥ 13

குலம் தான் எத்தனையும் ⋆
பிறந்தே இறந்தெய்த்தொழிந்தேன் ⋆
நலம் தான் ஒன்றும் இலேன் ⋆
நல்லதோர் அறம் செய்தும் இலேன் ⋆
நிலம் தோய் நீள் முகில் சேர் ⋆
நெறியார் திருவேங்கடவா ! ⋆
அலந்தேன் வந்தடைந்தேன் ⋆
அடியேனை ஆட் கொண்டருளே ॥ **1.9.4** ॥ 14

எப் பாவம் பலவும் ⋆
இவையே செய்திளைத்தொழிந்தேன் ⋆
துப்பா ! நின் அடியே ⋆
தொடர்ந்தேத்தவும் கிற்கின்றிலேன் ⋆
செப்பார் திண்வரை சூழ் ⋆
திருவேங்கட மாமலை ⋆
என் அப்பா ! வந்தடைந்தேன் ⋆
அடியேனை ஆட் கொண்டருளே ॥ **1.9.5** ॥ 15

மண்ணாய் நீர் எரி கால் ⋆
மஞ்சுலாவும் ஆகாசமுமாம் ⋆
புண்ணார் ஆக்கை தன்னுள் ⋆
புலம்பித்தளர்ந்தெய்த்தொழிந்தேன் ⋆
விண்ணார் நீள் சிகர ⋆
விரையார் திருவேங்கடவா ! ⋆

அண்ணா ! வந்தடைந்தேன் ⋆
அடியேனை ஆட் கொண்டருளே ॥ **1.9.6** ॥ 16

தெரியேன் பாலகனாய்ப் ⋆
பல தீமைகள் செய்தும் இட்டேன் ⋆
பெரியேன் ஆயின பின் ⋆
பிறர்க்கே உழைத்தேழை ஆனேன் ⋆
கரி சேர் பூம் பொழில் சூழ் ⋆
கன மா மலை வேங்கடவா ! ⋆
அரியே ! வந்தடைந்தேன் ⋆
அடியேனை ஆட் கொண்டருளே ॥ **1.9.7** ॥ 17

நோற்றேன் பல் பிறவி ⋆
உன்னைக் காண்பதோர் ஆசையினால் ⋆
ஏற்றேன் இப் பிறப்பே ⋆
இடர் உற்றனன் எம் பெருமான் ! ⋆
கோல் தேன் பாய்ந்தொழுகும் ⋆
குளிர் சோலை சூழ் வேங்கடவா ! ⋆
ஆற்றேன் வந்தடைந்தேன் ⋆
அடியேனை ஆட் கொண்டருளே ॥ **1.9.8** ॥ 18

பற்றேல் ஒன்றும் இலேன் ⋆
பாவமே செய்து பாவி ஆனேன் ⋆
மற்றேல் ஒன்றறியேன் ⋆
மாயனே ! எங்கள் மாதவனே ! ⋆
கல் தேன் பாய்ந்தொழுகும் ⋆
கமலச்சுனை வேங்கடவா ! ⋆

அற்றேன் வந்தடைந்தேன் ⋆
அடியேனை ஆட் கொண்டருளே ‖ **1.9.9** ‖ 19

‡ கண்ணாய் ஏழ் உலகுக்குயிராய ⋆
எங்கார் வண்ணனை ⋆
விண்ணோர் தாம் பரவும் ⋆
பொழில் வேங்கட வேதியனை ⋆
திண்ணார் மாடங்கள் சூழ் ⋆
திரு மங்கையர் கோன் கலியன் ⋆
பண்ணார் பாடல் பத்தும் ⋆
பயில்வார்க்கில்லை பாவங்களே ‖ **1.9.10** ‖ 20

அடிவரவு — தாய் மான் கொன்றேன் குலம் எப்பாவம் மண் தெரியேன்
நோற்றேன் பற்றேல் கண்ணாய் கண்

தாயே தந்தை முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 2.3 – விற்பெருவிழவும்

‡ விற்பெரு விழவும் கஞ்சனும் மல்லும் ⋆
வேழமும் பாகனும் வீழச் ⋆
செற்றவன் தன்னை புரம் எரி செய்த ⋆
சிவன் உறு துயர் களை தேவை ⋆
பற்றலர் வீயக் கோல் கையில் கொண்டு ⋆
பார்த்தன் தன் தேர் முன் நின்றானை ⋆
சிற்றவை பணியால் முடி துறந்தானைத் ⋆
திருவல்லிக்கேணிக் கண்டேனே ‖ **2.3.1** ‖ 21

வேதத்தை வேதத்தின் சுவைப் பயனை ⋆
விழுமிய முனிவர் விழுங்கும் ⋆
கோதில் இன் கனியை நந்தனார் களிற்றைக் ⋆
குவலயத்தோர் தொழுதேத்தும் ⋆
ஆதியை அமுதை என்னை ஆள் உடை அப்பனை ⋆
ஒப்பவர் இல்லா மாதர்கள் வாழும் ⋆
மாட மா மயிலைத் ⋆
திருவல்லிக்கேணிக் கண்டேனே ‖ **2.3.2** ‖ 22

வஞ்சனை செய்யத் தாய் உருவாகி ⋆
வந்த பேய் அலறி மண் சேர ⋆
நஞ்சமர் முலை ஊடுயிர் செக உண்ட நாதனைத் ⋆
தானவர் கூற்றை ⋆
விஞ்சை வானவர் சாரணர் சித்தர் ⋆

வியந்துதி செய்யப் பெண் உருவாகி ⋆
அஞ்சுவை அமுதம் அன்றளித்தானைத் ⋆
திருவல்லிக்கேணிக் கண்டேனே ‖ **2.3.3** ‖ 23

இந்திரனுக்கென்றாயர்கள் எடுத்த ⋆
எழில் விழவில் பழ நடை செய் ⋆
மந்திர விதியில் பூசனை பெறாது ⋆
மழை பொழிந்திடத் தளர்ந்து ⋆
ஆயர் எம் தம்மோடின ஆநிரை தளராமல் ⋆
எம் பெருமான் அருள் என்ன ⋆
அந்தம் இல் வரையால் மழை தடுத்தானைத் ⋆
திருவல்லிக்கேணிக் கண்டேனே ‖ **2.3.4** ‖ 24

இன் துணைப் பதுமத்தலர்மகள் தனக்கும் இன்பன் ⋆
நற் புவி தனக்கிறைவன் ⋆
தன் துணை ஆயர் பாவை நப்பின்னை தனக்கிறை ⋆
மற்றையோர்க்கெல்லாம் வன் துணை ⋆
பஞ்ச பாண்டவர்க்காகி ⋆
வாய் உரை தூது சென்றியங்கும் என் துணை ⋆
எந்தை தந்தை தம்மானைத் ⋆
திருவல்லிக்கேணிக் கண்டேனே ‖ **2.3.5** ‖ 25

அந்தகன் சிறுவன் அரசர் தம் அரசற்கிளையவன் ⋆
அணி இழையைச் சென்று ⋆
எந்தமக்குரிமை செய் எனத் தரியாது ⋆
எம் பெருமான் அருள் ! என்ன ⋆
சந்தம் அல் குழலாள் அலக்கண் ⋆
நூற்றுவர் தம் பெண்டிரும் எய்தி நூல் இழப்ப ⋆

இந்திரன் சிறுவன் தேர் முன் நின்றானைத் ⋆
திருவல்லிக்கேணிக் கண்டேனே ‖ **2.3.6** ‖ 26

பரதனும் தம்பி சத்துருக்கனனும் ⋆
இலக்குமனோடு மைதிலியும் ⋆
இரவும் நன் பகலும் துதி செய்ய நின்ற ⋆
இராவணாந்தகனை எம்மானை ⋆
குரவமே கமழும் குளிர் பொழில் ஊடு ⋆
குயிலொடு மயில்கள் நின்றால ⋆
இரவியின் கதிர்கள் நுழைதல் செய்தறியாத் ⋆
திருவல்லிக்கேணிக் கண்டேனே ‖ **2.3.7** ‖ 27

‡ பள்ளியில் ஓதி வந்த தன் சிறுவன் ⋆
வாயில் ஓர் ஆயிர நாமம் ⋆
ஒள்ளிய ஆகிப் போத ஆங்கதனுக்கு ⋆
ஒன்றும் ஓர் பொறுப்பிலன் ஆகி ⋆
பிள்ளையைச் சீறி வெகுண்டு தூண் புடைப்பப் ⋆
பிறை எயிற்றனல் விழி பேழ்வாய் ⋆
தெள்ளிய சிங்கம் ஆகிய தேவைத் ⋆
திருவல்லிக்கேணிக் கண்டேனே ‖ **2.3.8** ‖ 28

மீன் அமர் பொய்கை நாள் மலர் கொய்வான் ⋆
வேட்கையினோடு சென்றிழிந்த ⋆
கான் அமர் வேழம் கைய் எடுத்தலறக் ⋆
கரா அதன் காலினைக் கதுவ ⋆
ஆனையின் துயரம் தீரப் புள் ஊர்ந்து ⋆
சென்று நின்றாழி தொட்டானை ⋆

தேன் அமர் சோலை மாட மா மயிலைத் ⋆
திருவல்லிக்கேணிக் கண்டேனே ‖ **2.3.9** ‖ 29

‡ மன்னு தண் பொழிலும் வாவியும் மதிளும் ⋆
மாட மாளிகையும் மண்டபமும் ⋆
தென்னன் தொண்டையர் கோன் செய்த நன் மயிலைத் ⋆
திருவல்லிக்கேணி நின்றானை ⋆
கன்னி நன் மாட மங்கையர் தலைவன் ⋆
காமரு சீர்க் கலிகன்றி ⋆
சொன்ன சொல் மாலை பத்துடன் வல்லார் ⋆
சுகம் இனிதாள்வர் வான் உலகே ‖ **2.3.10** ‖ 30

அடிவரவு — வில் வேதத்தை வஞ்சனை இந்திரனுக்கு இன்துணை அந்தகன் பரதன் பள்ளியில் மீனமர் மன்னு அன்றாயர்

விற்பெருவிழவும் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 2.4 – அன்றாயர்

‡ அன்றாயர் குலக் கொடியோடு ⋆
அணி மா மலர் மங்கையொடன்பளவி ⋆
அவுணர்க்கென்றானும் இரக்கம் இலாதவனுக்கு ⋆
உறையும் இடம் ஆவது ⋆
இரும் பொழில் சூழ் நன்றாய புனல் நறையூர் திருவாலி குடந்தை ⋆
தடம் திகழ் கோவல் நகர் ⋆
நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தாற்கிடம் ⋆
மா மலை ஆவது நீர் மலையே ॥ **2.4.1** ॥ 31

காண்டாவனம் என்பதோர் காடு ⋆
அமரர்க்கரையன் அது கண்டவன் நிற்க ⋆
முனே மூண்டார் அழல் உண்ண முனிந்ததுவும் ⋆
அது அன்றியும் முன் உலகம் பொறை தீர்த்தாண்டான் ⋆
அவுணன் அவன் மார்பகலம் ⋆
உகிரால் வகிர் ஆக முனிந்து ⋆
அரியாய் நீண்டான் குறள் ஆகி நிமிர்ந்தவனுக்கிடம் ⋆
மா மலை ஆவது நீர் மலையே ॥ **2.4.2** ॥ 32

அல மன்னும் அடல் சுரி சங்கம் எடுத்து ⋆
அடல் ஆழியினால் அணி ஆர் உருவின் ⋆
புல மன்னு வடம் புனை கொங்கையினாள் ⋆
பொறை தீர முனாள் அடுவாள் அமரில் ⋆
பல மன்னர் படச் சுடர் ஆழியினைப் ⋆

பகலோன் மறையப் பணி கொண்டணி சேர் ⋆
நில மன்னனும் ஆய் உலகாண்டவனுக்கிடம் ⋆
மா மலை ஆவது நீர் மலையே ‖ **2.4.3** ‖ 33

தாங்காததோர் ஆள் அரியாய் ⋆
அவுணன் தனை வீட முனிந்தவனால் அமரும் ⋆
பூங்கோதையர் பொங்கெரி மூழ்க விளைத்து ⋆
அது அன்றியும் வென்றி கொள் வாள் அமரில் ⋆
பாங்காக முன் ஐவரொடன்பளவிப் ⋆
பதிற்றைந்திரட்டிப் படை வேந்தர் பட ⋆
நீங்காச் செருவில் நிறை காத்தவனுக்கிடம் ⋆
மா மலை ஆவது நீர் மலையே ‖ **2.4.4** ‖ 34

மாலும் கடல் ஆர மலைக் குவடிட்டணை கட்டி ⋆
வரம்புருவ மதி சேர் ⋆
கோல மதிள் ஆய இலங்கை கெடப் ⋆
படை தொட்டொரு கால் அமரில் அதிர ⋆
காலம் இது என்றயன் வாளியினால் ⋆
கதிர் நீள் முடி பத்தும் அறுத்தமரும் ⋆
நீல முகில் வண்ணர் எமக்கிறைவற்க்கிடம் ⋆
மா மலை ஆவது நீர் மலையே ‖ **2.4.5** ‖ 35

பார் ஆர் உலகும் பனி மால் வரையும் ⋆
கடலும் சுடரும் இவை உண்டும் ⋆
எனக்காராதென நின்றவன் எம் பெருமான் ⋆
அலை நீர் உலகுக்கரசாகிய ⋆
அப்பேரானை முனிந்த முனிக்கரையன் ⋆
பிறர் இல்லை நுனக்கெனும் எல்லையினான் ⋆

நீர் ஆர் பேரான் நெடுமால் அவனுக்கிடம் ⋆
மா மலை ஆவது நீர் மலையே ॥ **2.4.6** ॥ 36

புகர் ஆர் உரு ஆகி முனிந்தவனைப் ⋆
புகழ் வீட முனிந்துயிர் உண்டு ⋆
அசுரன் நகர் ஆயின பாழ் பட நாமம் எறிந்து ⋆
அது அன்றியும் வென்றி கொள் வாள் அவுணன் ⋆
பகராதவன் ஆயிர நாமம் ⋆
அடிப் பணியாதவனைப் பணியால் அமரில் ⋆
நிகர் ஆயவன் நெஞ்சிடந்தான் அவனுக்கிடம் ⋆
மா மலை ஆவது நீர் மலையே ॥ **2.4.7** ॥ 37

பிச்சச் சிறு பீலி பிடித்துலகில் ⋆
பிணம் தின் மடவார் அவர் போல் ⋆
அங்ஙனே அச்சம் இலர் நாண் இலர் ஆதன்மையால் ⋆
அவர் செய்கை வெறுத்தணி மா மலர் தூய் ⋆
நச்சி நமனார் அடையாமை ⋆
நமக்கருள் செய் என உள் குழைந்தார்வமொடு ⋆
நிச்சம் நினைவார்க்கருள் செய்யும் அவற்கிடம் ⋆
மா மலை ஆவது நீர் மலையே ॥ **2.4.8** ॥ 38

பேசும் அளவன்றிது வம்மின் நமர் ⋆
பிறர் கேட்பதன் முன் பணிவார் வினைகள் ⋆
நாசம் அது செய்திடும் ஆதன்மையால் ⋆
அதுவே நமதுய்விடம் நாள் மலர் மேல் ⋆
வாசம் அணி வண்டறை பைம் புறவில் ⋆
மனம் ஐந்தொடு நைந்துழல்வார் ⋆

மதி இல் நீசர் அவர் சென்றடையாதவனுக்கிடம் ⋆
மா மலை ஆவது நீர் மலையே ॥ **2.4.9** ॥ 39

‡ நெடு மால் அவன் மேவிய நீர் மலை மேல் ⋆
நிலவும் புகழ் மங்கையர் கோன் ⋆
அமரில் கட மா களி யானை வல்லான் ⋆
கலியன் ஒலி செய் தமிழ் மாலை வல்லார்க்கு ⋆
உடனே விடு மால் வினை ⋆
வேண்டிடில் மேல் உலகும் எளிதாயிடும் அன்றி இலங்கொலி சேர் ⋆
கொடு மா கடல் வையகம் ஆண்டு ⋆
மதிக்குடை மன்னவராய் அடி கூடுவரே ॥ **2.4.10** ॥ 40

அடிவரவு — அன்றாயர் காண்டா அலம் தாங்காது மாலும் பார் புகர் பிச்சம் பேசும் நெடுமால் பாராயது

அன்றாயர் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 2.7 – திவளும்

‡ திவளும் வெண் மதி போல் திரு முகத்தரிவை ⋆
செழும் கடல் அமுதினில் பிறந்த அவளும் ⋆
நின் ஆகத்திருப்பதும் அறிந்தும் ⋆
ஆகிலும் ஆசை விடாளால் ⋆
குவளையம் கண்ணி கொல்லியம் பாவை ⋆
சொல்லு நின் தாள் நயந்திருந்த இவளை ⋆
உன் மனத்தால் என் நினைந்திருந்தாய் ⋆
இடவெந்தை எந்தை பிரானே ‖ **2.7.1** ‖ 41

துளம் படு முறுவல் தோழியர்க்கருளாள் ⋆
துணை முலை சாந்து கொண்டணியாள் ⋆
குளம் படு குவளைக் கண் இணை எழுதாள் ⋆
கோல நல் மலர் குழற்கணியாள் ⋆
வளம் படு முன்நீர் வையம் முன் அளந்த ⋆
மால் என்னும் மால் இன மொழியாள் ⋆
இளம் படி இவளுக்கென் நினைந்திருந்தாய் ⋆
இடவெந்தை எந்தை பிரானே ‖ **2.7.2** ‖ 42

சாந்தமும் பூணும் சந்தனக் குழம்பும் ⋆
தட முலைக்கணியிலும் தழலாம் ⋆
போந்த வெண் திங்கள் கதிர் சுடர் மெலியும் ⋆
பொரு கடல் புலம்பிலும் புலம்பும் ⋆
மாந்தளிர் மேனி வண்ணமும் பொன்னாம் ⋆

வளைகளும் இறை நில்லா ⋆
என்தன் ஏந்திழை இவளுக்கென் நினைந்திருந்தாய் ⋆
இடவெந்தை எந்தை பிரானே ॥ **2.7.3** ॥ 43

ஊழியின் பெரிதால் நாழிகை ! என்னும் ⋆
ஒண் சுடர் துயின்றதால் ! என்னும் ⋆
ஆழியும் புலம்பும் ! அன்றிலும் உறங்கா ⋆
தென்றலும் தீயினில் கொடிதாம் ⋆
தோழியோ ! என்னும் துணை முலை அரக்கும் ⋆
சொல்லுமின் என் செய்கேன் என்னும் ⋆
ஏழை என் பொன்னுக்கென் நினைந்திருந்தாய் ⋆
இடவெந்தை எந்தை பிரானே ॥ **2.7.4** ॥ 44

ஓதிலும் உன் பேர் அன்றி மற்றோதாள் ⋆
உருகும் நின் திருவுரு நினைந்து ⋆
காதன்மை பெரிது கையற உடையள் ⋆
கயல் நெடுங்கண் துயில் மறந்தாள் ⋆
பேதையேன் பேதை பிள்ளைமை பெரிது ⋆
தெள்ளியள் வள்ளி நுண் மருங்குல் ⋆
ஏதலர் முன்னா என் நினைந்திருந்தாய் ⋆
இடவெந்தை எந்தை பிரானே ॥ **2.7.5** ॥ 45

தன் குடிக்கேதும் தக்கவா நினையாள் ⋆
தடம் கடல் நுடங்கெயில் இலங்கை ⋆
வன் குடி மடங்க வாள் அமர் தொலைத்த ⋆
வார்த்தை கேட்டின்புறும் மயங்கும் ⋆
மின் கொடி மருங்குல் சுருங்க மேல் நெருங்கி ⋆
மென் முலை பொன் பயந்திருந்த ⋆

என் கொடி இவளுக்கென் நினைந்திருந்தாய் ⋆
இடவெந்தை எந்தை பிரானே ‖ **2.7.6** ‖ 46

உளம் கனிந்திருக்கும் உன்னையே பிதற்றும் ⋆
உனக்கன்றி எனக்கன்பொன்றிலளால் ⋆
வளங்கனி பொழில் சூழ் மாலிருஞ்சோலை ⋆
மாயனே ! என்று வாய் வெருவும் ⋆
களங்கனி முறுவல் காரிகை பெரிது ⋆
கவலையோடவலம் சேர்ந்திருந்த ⋆
இளங்கனி இவளுக்கென் நினைந்திருந்தாய் ⋆
இடவெந்தை எந்தை பிரானே ‖ **2.7.7** ‖ 47

‡ அலம் கெழு தடக்கை ஆயன் வாய் ஆம்பற்கு ⋆
அழியுமால் என் உள்ளம் ! என்னும் ⋆
புலம் கெழு பொரு நீர்ப் புட்குழி பாடும் ⋆
போதுமோ நீர் மலைக்கென்னும் ⋆
குலம் கெழு கொல்லி கோமள வல்லிக் ⋆
கொடி இடை நெடு மழைக் கண்ணி ⋆
இலங்கெழில் தோளிக்கென் நினைந்திருந்தாய் ⋆
இடவெந்தை எந்தை பிரானே ‖ **2.7.8** ‖ 48

பொன் குலாம் பயலை பூத்தன மென் தோள் ⋆
பொரு கயல் கண் துயில் மறந்தாள் ⋆
அன்பினால் உன்மேல் ஆதரம் பெரிது ⋆
இவ் வணங்கினுக்குற்ற நோய் அறியேன் ⋆
மின் குலா மருங்குல் சுருங்க மேல் நெருங்கி ⋆
வீங்கிய வன முலையாளுக்கு ⋆

என் கொலாம் குறிப்பில் என் நினைந்திருந்தாய் ⋆
இடவெந்தை எந்தை பிரானே ॥ **2.7.9** ॥ 49

‡ அன்னமும் மீனும் ஆமையும் அரியும் ஆய ⋆
எம் மாயனே ! அருளாய் ⋆
என்னும் இன் தொண்டர்க்கின் அருள் புரியும் ⋆
இடவெந்தை எந்தை பிரானை ⋆
மன்னு மா மாட மங்கையர் தலைவன் ⋆
மானவேல் கலியன் வாய் ஒலிகள் ⋆
பன்னிய பனுவல் பாடுவார் ⋆
நாளும் பழவினை பற்றறுப்பாரே ॥ **2.7.10** ॥ 50

அடிவரவு — திவளும் துளம் சாந்தம் ஊழியில் ஓதிலும் தன் உளம் அலம் பொன் அன்னம் திரிபுரம்

திவளும் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 3.6 – தூவிரிய

‡ தூவிரிய மலர் உழக்கித் ⋆
துணையோடும் பிரியாதே ⋆
பூவிரிய மது நுகரும் ⋆
பொறி வரிய சிறு வண்டே ! ⋆
தீவிரிய மறை வளர்க்கும் ⋆
புகழ் ஆளர் திருவாலி ⋆
ஏவரி வெம் சிலையானுக்கு ⋆
என் நிலைமை உரையாயே ‖ **3.6.1** ‖ 51

பிணி அவிழும் நறு நீல ⋆
மலர் கிழியப் பெடையோடும் ⋆
அணிமலர் மேல் மது நுகரும் ⋆
அறு கால சிறு வண்டே ! ⋆
மணி கெழுநீர் மருங்கலரும் ⋆
வயல் ஆலி மணவாளன் ⋆
பணி அறியேன் நீ சென்று ⋆
என் பயலை நோய் உரையாயே ‖ **3.6.2** ‖ 52

நீர் வானம் மண் எரி காலாய் ⋆
நின்ற நெடுமால் ⋆
தன் தார் ஆய நறுந் துளவம் ⋆
பெரும் தகையேற்கருளானே ⋆
சீர் ஆரும் வளர் பொழில் சூழ் ⋆

திருவாலி வயல் வாழும் ⋆
கூர் வாய சிறு குருகே ! ⋆
குறிப்பறிந்து கூறாயே ‖ **3.6.3** ‖ 53

தான் ஆக நினையானேல் ⋆
தன் நினைந்து நைவேற்கு ⋆
ஓர் மீன் ஆய கொடி நெடு வேள் ⋆
வலி செய்ய மெலிவேனோ ⋆
தேன் வாய வரி வண்டே ! ⋆
திருவாலி நகர் ஆளும் ⋆
ஆன் ஆயற்கென் உறு நோய் ⋆
அறியச் சென்றுரையாயே ‖ **3.6.4** ‖ 54

வாள் ஆய கண் பனிப்ப ⋆
மென் முலைகள் பொன் அரும்ப ⋆
நாள் நாளும் ⋆
நின் நினைந்து நைவேற்கு ⋆
ஓ ! மண் அளந்த தாளாளா ! தண் குடந்தை நகர் ஆளா ! ⋆
வரை எடுத்த தோளாளா ⋆
என் தனக்கு ⋆
ஓர் துணையாளன் ஆகாயே ‖ **3.6.5** ‖ 55

தார் ஆய தண் துளவ ⋆
வண்டுழுத வரை மார்பன் ⋆
போர் ஆனைக் கொம்பொசித்த ⋆
புட்பாகன் என் அம்மான் ⋆
தேர் ஆரும் நெடு வீதித் ⋆
திருவாலி நகர் ஆளும் ⋆

கார் ஆயன் என்னுடைய ⋆
கன வளையும் கவர்வானோ ॥ **3.6.6** ॥ 56

கொண்டரவத் திரை உலவு ⋆
குரை கடல் மேல் குலவரை போல் ⋆
பண்டரவின் அணைக் கிடந்து ⋆
பார் அளந்த பண்பாளா ! ⋆
வண்டமரும் வளர் பொழில் சூழ் ⋆
வயல் ஆலி மைந்தா ! ⋆
என் கண் துயில் நீ கொண்டாய்க்கு ⋆
என் கன வளையும் கடவேனோ ॥ **3.6.7** ॥ 57

குயில் ஆலும் வளர் பொழில் சூழ் ⋆
தண் குடந்தைக் குடம் ஆடீ ⋆
துயிலாத கண் இணையேன் ⋆
நின் நினைந்து துயர்வேனோ ! ⋆
முயல் ஆலும் இள மதிக்கே ⋆
வளை இழந்தேற்கு ⋆
இது நடுவே வயல் ஆலி மணவாளா ! ⋆
கொள்வாயோ மணி நிறமே ॥ **3.6.8** ॥ 58

நிலை ஆளா ! நின் வணங்க ⋆
வேண்டாயே ஆகிலும் ⋆
என் முலை ஆள ஒரு நாள் ⋆
உன் அகலத்தால் ஆளாயே ⋆
சிலை ஆளா ! மரம் எய்த திறல் ஆளா ! ⋆
திரு மெய்ய மலையாள ⋆

நீ ஆள ⋆
வளை ஆள மாட்டோமே ‖ **3.6.9** ‖ 59

‡ மை இலங்கு கருங்குவளை ⋆
மருங்கலரும் வயல் ஆலி ⋆
நெய் இலங்கு சுடர் ஆழிப் ⋆
படையானை நெடுமாலை ⋆
கை இலங்கு வேல் கலியன் ⋆
கண்டுரைத்த தமிழ் மாலை ⋆
ஐ இரண்டும் இவை வல்லார்க்கு ⋆
அரு வினைகள் அடையாவே ‖ **3.6.10** ‖ 60

அடிவரவு — தூவிரிய பிணி நீர் தான் வாள் தாராய கொண்டு குயில் நிலையாளா மையிலங்கு கள்வன்

தூவிரிய முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 4.9 – நும்மைத் தொழுதோம்

‡ நும்மைத் தொழுதோம் ⋆
நுந் தம் பணி செய்திருக்கும் நும் அடியோம் ⋆
இம்மைக்கின்பம் பெற்றோம் ⋆
எந்தாய் இந்தளூரீரே ⋆
எம்மைக் கடிதாக் கருமம் அருளி ⋆
ஆவா ! என்றிரங்கி ⋆
நம்மை ஒரு கால் காட்டி நடந்தால் ⋆
நாங்கள் உய்யோமே ॥ **4.9.1** ॥ 61

‡ சிந்தை தன்னுள் நீங்காதிருந்த திருவே ! ⋆
மருவினிய மைந்தா ⋆
அந்தண் ஆலி மாலே ! ⋆
சோலை மழ களிறே ! ⋆
நந்தா விளக்கின் சுடரே ! ⋆
நறையூர் நின்ற நம்பீ ⋆
என் எந்தாய் ! இந்தளூராய் ! ⋆
அடியேற்கிறையும் இரங்காயே ! ॥ **4.9.2** ॥ 62

பேசுகின்றதிதுவே ⋆
வையம் ஈர் அடியால் அளந்த ⋆
மூசி வண்டு முரலும் ⋆
கண்ணி முடியீர் ⋆
உம்மைக் காணும் ஆசை என்னும் கடலில் வீழ்ந்து ⋆

இங்கயர்த்தோம் ⋆
அயலாரும் ஏசுகின்றதிதுவே காணும் ⋆
இந்தளூரீரே ! ॥ **4.9.3** ॥ 63

ஆசை வழுவாதேத்தும் ⋆
எமக்கிங்கிழுக்காய்த்து ⋆
அடியோர்க்குத் தேசம் அறிய ⋆
உமக்கே ஆளாய்த் திரிகின்றோமுக்கு ⋆
காசின் ஒளியில் திகழும் வண்ணம் ⋆
காட்டீர் எம் பெருமான் ⋆
வாசி வல்லீர் ! இந்தளூரீர் ! ⋆
வாழ்ந்தே போம் நீரே ! ॥ **4.9.4** ॥ 64

தீ எம் பெருமான் நீர் எம் பெருமான் ⋆
திசையும் இரு நிலனுமாய் ⋆
எம் பெருமான் ஆகி நின்றால் ⋆
அடியோம் காணோமால் ⋆
தா எம் பெருமான் ⋆
தந்தை தந்தை ஆவீர் ⋆
அடியோமுக்கே எம் பெருமான் அல்லீரோ நீர் ⋆
இந்தளூரீரே ! ॥ **4.9.5** ॥ 65

சொல்லாதொழியகில்லேன் ⋆
அறிந்த சொல்லில் ⋆
நும் அடியார் எல்லாரோடும் ஒக்க ⋆
எண்ணி இருந்தீர் அடியேனை ⋆
நல்லார் அறிவீர் தீயார் அறிவீர் ⋆
நமக்கிவ்வுலகத்தில் ⋆

எல்லாம் அறிவீர் ஈதே அறியீர் ⋆
இந்தளூரீரே ! ॥ **4.9.6** ॥ 66

மாட்டீர் ஆனீர் பணி நீர் கொள்ள ⋆
எம்மைப் பணி அறியா விட்டீர் ⋆
இதனை வேறே சொன்னோம் ⋆
இந்தளூரீரே ! ⋆
காட்டீர் ஆனீர் ⋆
நுந்தம் அடிக்கள் காட்டில் ⋆
உமக்கிந்த நாட்டே வந்து தொண்டர் ஆன ⋆
நாங்கள் உய்யோமே ॥ **4.9.7** ॥ 67

முன்னை வண்ணம் பாலின் வண்ணம் ⋆
முழுதும் நிலை நின்ற ⋆
பின்னை வண்ணம் கொண்டல் வண்ணம் ⋆
வண்ணம் எண்ணுங்கால் ⋆
பொன்னின் வண்ணம் மணியின் வண்ணம் ⋆
புரையும் திருமேனி ⋆
இன்ன வண்ணம் என்று காட்டீர் ⋆
இந்தளூரீரே ! ॥ **4.9.8** ॥ 68

எந்தை தந்தை தம்மான் என்னென்று ⋆
எமர் ஏழ் ஏழ் அளவும் ⋆
வந்து நின்ற தொண்டரோர்க்கே ⋆
வாசி வல்லீரால் ⋆
சிந்தை தன்னுள் முந்தி நிற்றிர் ⋆
சிறிதும் திருமேனி ⋆

இந்த வண்ணம் என்று காட்டீர் ⋆
இந்தளூரீரே ‖ **4.9.9** ‖ 69

‡ ஏர் ஆர் பொழில் சூழ் ⋆
இந்தளூரில் எந்தை பெருமானை ⋆
கார் ஆர் புறவின் மங்கை வேந்தன் ⋆
கலியன் ஒலி செய்த ⋆
சீர் ஆர் இன் சொல் மாலை ⋆
கற்றுத் திரிவார் உலகத்தில் ⋆
ஆர் ஆர் அவரே ⋆
அமரர்க்கென்றும் அமரர் ஆவாரே ‖ **4.9.10** ‖ 70

அடிவரவு — நும்மை சிந்தை பேசுகின்றது ஆசை தீ சொல்லாது மாட்டீர் முன்னை எந்தை ஏரார் ஆய்ச்சியர்

நும்மைத் தொழுதோம் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 5.8 – ஏழை ஏதலன்

‡ ஏழை ஏதலன் கீழ் மகன் என்னாதிரங்கி ⋆
மற்றவற்கின் அருள் சுரந்து ⋆
மாழை மான் மட நோக்கி உன் தோழி ⋆
உம்பி எம்பி என்றொழிந்திலை ⋆
உகந்து தோழன் நீ எனக்கிங்கொழி என்ற சொற்கள் வந்து ⋆
அடியேன் மனத்திருந்திட ⋆
ஆழி வண்ண ! நின் அடி இணை அடைந்தேன் ⋆
அணி பொழில் திருவரங்கத்தம்மானே ‖ **5.8.1** ‖ 71

வாத மா மகன் மர்க்கடம் விலங்கு ⋆
மற்றோர் சாதி என்றொழிந்திலை ⋆
உகந்து காதல் ஆதரம் கடலினும் பெருகச் ⋆
செய் தகவினுக்கில்லை கைம்மாறென்று ⋆
கோதில் வாய்மையினாயொடும் ⋆
உடனே உண்பன் நான் என்ற ஒண் பொருள் ⋆
எனக்கும் ஆதல் வேண்டும் என்றடி இணை அடைந்தேன் ⋆
அணி பொழில் திருவரங்கத்தம்மானே ‖ **5.8.2** ‖ 72

கடி கொள் பூம் பொழில் காமரு பொய்கை ⋆
வைகு தாமரை வாங்கிய வேழம் ⋆
முடியும் வண்ணம் ஓர் முழு வலி முதலை பற்ற ⋆
மற்றது நின் சரண் நினைப்ப ⋆
கொடிய வாய் விலங்கின் உயிர் மலங்கக் ⋆

கொண்ட சீற்றம் ஒன்றுண்டுளதறிந்து ⋆
உன் அடியனேனும் வந்தடி இணை அடைந்தேன் ⋆
அணி பொழில் திருவரங்கத்தம்மானே ‖ **5.8.3** ‖ 73

நஞ்சு சோர்வதோர் வெஞ்சின அரவம் ⋆
வெருவி வந்து நின் சரண் எனச் சரணா ⋆
நெஞ்சில் கொண்டு நின் அஞ்சிறைப் பறவைக்கு ⋆
அடைக்கலம் கொடுத்தருள் செய்ததறிந்து ⋆
வெஞ்சொலாளர்கள் நமன் தமர் கடியர் ⋆
கொடிய செய்வன உள ⋆
அதற்கடியேன் அஞ்சி வந்து நின் அடி இணை அடைந்தேன் ⋆
அணி பொழில் திருவரங்கத்தம்மானே ‖ **5.8.4** ‖ 74

மாக மா நிலம் முழுதும் வந்திறைஞ்சும் ⋆
மலர் அடி கண்ட மா மறையாளன் ⋆
தோகை மா மயில் அன்னவர் இன்பம் ⋆
துற்றிலாமையில் அத்த ! இங்கொழிந்து ⋆
போகம் நீ எய்திப் பின்னும் நம் இடைக்கே ⋆
போதுவாய் என்ற பொன் அருள் ⋆
எனக்கும் ஆக வேண்டும் என்றடி இணை அடைந்தேன் ⋆
அணி பொழில் திருவரங்கத்தம்மானே ‖ **5.8.5** ‖ 75

மன்னு நான்மறை மா முனி பெற்ற மைந்தனை ⋆
மதியாத வெங்கூற்றம் தன்னை அஞ்சி ⋆
நின் சரண் எனச் சரணாய்த் ⋆
தகவில் காலனை உக முனிந்தொழியா ⋆
பின்னை என்றும் நின் திருவடி பிரியா வண்ணம் ⋆
எண்ணிய பேர் அருள் ⋆

எனக்கும் அன்னதாகும் என்றடி இணை அடைந்தேன் ⋆
அணி பொழில் திருவரங்கத்தம்மானே ॥ **5.8.6** ॥ 76

ஓது வாய்மையும் உவனியப் பிறப்பும் ⋆
உனக்கு முன் தந்த அந்தணன் ஒருவன் ⋆
காதல் என் மகன் புகல் இடம் காணேன் ⋆
கண்டு நீ தருவாய் எனக்கென்று ⋆
கோதில் வாய்மையினான் உனை வேண்டிய ⋆
குறை முடித்தவன் சிறுவனைக் கொடுத்தாய் ⋆
ஆதலால் வந்துன் அடி இணை அடைந்தேன் ⋆
அணி பொழில் திருவரங்கத்தம்மானே ॥ **5.8.7** ॥ 77

வேத வாய் மொழி அந்தணன் ஒருவன் ⋆
எந்தை ! நின் சரண் என்னுடை மனைவி ⋆
காதல் மக்களைப் பயத்தலும் காணாள் ⋆
கடியதோர் தெய்வம் கொண்டொளிக்கும் என்றழைப்ப ⋆
ஏதலார் முன்னே இன் அருள் அவர்க்குச் செய்து ⋆
உன் மக்கள் மற்றிவர் என்று கொடுத்தாய் ⋆
ஆதலால் வந்துன் அடி இணை அடைந்தேன் ⋆
அணி பொழில் திருவரங்கத்தம்மானே ॥ **5.8.8** ॥ 78

‡ துளங்கு நீண் முடி அரசர் தம் குரிசில் ⋆
தொண்டை மன்னவன் திண் திறல் ஒருவற்கு ⋆
உளம் கொள் அன்பினோடின் அருள் சுரந்து ⋆
அங்கோடு நாழிகை ஏழ் உடன் இருப்ப ⋆
வளம் கொள் மந்திரம் மற்றவற்கருளிச் செய்தவாறு ⋆
அடியேன் அறிந்து ⋆

உலகம் அளந்த பொன் அடியே அடைந்துய்ந்தேன் ⋆
அணி பொழில் திருவரங்கத்தம்மானே ‖ **5.8.9** ‖ 79

‡ மாட மாளிகை சூழ் திருமங்கை மன்னன் ⋆
ஒன்னலர் தங்களை வெல்லும் ⋆
ஆடல் மா வலவன் கலிகன்றி ⋆
அணி பொழில் திருவரங்கத்தம்மானை ⋆
நீடு தொல் புகழ் ஆழி வல்லானை ⋆
எந்தையை நெடுமாலை நினைந்த ⋆
பாடல் பத்திவை பாடுமின் தொண்டீர் ! பாட ⋆
நும்மிடைப் பாவம் நில்லாவே ‖ **5.8.10** ‖ 80

அடிவரவு — ஏழை வாதம் கடி நஞ்சு மாகம் மன்னு ஓது வேதம் துளங்கு மாடம் கை

ஏழை ஏதலன் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமானுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 6.9 – பெடையடர்த்த

‡ பெடை அடர்த்த மட அன்னம் ⋆
பிரியாது ⋆
மலர்க் கமலம் மடல் எடுத்து மது நுகரும் ⋆
வயல் உடுத்த திருநறையூர் ⋆
முடை அடர்த்த சிரம் ஏந்தி ⋆
மூவுலகும் பலி திரிவோன் ⋆
இடர் கெடுத்த திருவாளன் ⋆
இணை அடியே அடை நெஞ்சே ! ॥ **6.9.1** ॥ 81

கழி ஆரும் கன சங்கம் ⋆
கலந்தெங்கும் நிறைந்தேறி ⋆
வழி ஆர முத்தீன்று ⋆
வளம் கொடுக்கும் திருநறையூர் ⋆
பழி ஆரும் விறல் அரக்கன் ⋆
பரு முடிகள் அவை சிதற ⋆
அழல் ஆறும் சரம் துரந்தான் ⋆
அடி இணையே அடை நெஞ்சே ! ॥ **6.9.2** ॥ 82

சுளை கொண்ட பலங்கனிகள் ⋆
தேன் பாய ⋆
கதலிகளின் திளை கொண்ட பழம் கெழுமுத் ⋆
திகழ் சோலைத் திருநறையூர் ⋆
வளை கொண்ட வண்ணத்தன் ⋆

பின் தோன்றல் ⋆
மூவுலகோடளை வெண்ணெய் உண்டான் தன் ⋆
அடி இணையே அடை நெஞ்சே ! ॥ **6.9.3** ॥ 83

துன்றோளித் துகிற் படலம் ⋆
துன்னி எங்கும் மாளிகை மேல் ⋆
நின்றார வான் மூடும் ⋆
நீள் செல்வத் திருநறையூர் ⋆
மன்றாரக் குடம் ஆடி ⋆
வரை எடுத்து மழை தடுத்த ⋆
குன்றாரும் திரள் தோளன் ⋆
குரை கழலே அடை நெஞ்சே ! ॥ **6.9.4** ॥ 84

அகிற்குறடும் சந்தனமும் ⋆
அம் பொன்னும் அணி முத்தும் ⋆
மிகக் கொணர்ந்து திரை உந்தும் ⋆
வியன் பொன்னித் திருநறையூர் ⋆
பகல் கரந்த சுடர் ஆழிப் படையான் ⋆
இவ்வுலகேழும் ⋆
புகக் கரந்த திரு வயிற்றன் ⋆
பொன் அடியே அடை நெஞ்சே ! ॥ **6.9.5** ॥ 85

பொன் முத்தும் அரி உகிரும் ⋆
புழைக் கைம் மா கரிக் கோடும் ⋆
மின்னத் தண் திரை உந்தும் ⋆
வியன் பொன்னித் திருநறையூர் ⋆
மின் ஒத்த நுண் மருங்குல் ⋆
மெல் இயலைத் ⋆

திரு மார்பில் மன்னத் தான் வைத்துகந்தான் ⋆
மலர் அடியே அடை நெஞ்சே ! ‖ **6.9.6** ‖ 86

சீர் தழைத்த கதிர்ச் செந்நெல் ⋆
செங்கமலத்திடை இடையின் ⋆
பார் தழைத்துக் கரும்போங்கிப் ⋆
பயன் விளைக்கும் திருநறையூர் ⋆
கார் தழைத்த திரு உருவன் ⋆
கண்ண பிரான் விண்ணவர் கோன் ⋆
தார் தழைத்த துழாய் முடியன் ⋆
தளிர் அடியே அடை நெஞ்சே ! ‖ **6.9.7** ‖ 87

‡ குலை ஆர்ந்த பழுக் காயும் ⋆
பசுங்காயும் பாளை முத்தும் ⋆
தலை ஆர்ந்த இளங்கமுகின் ⋆
தடஞ்சோலைத் திருநறையூர் ⋆
மலை ஆர்ந்த கோலம் சேர் ⋆
மணி மாடம் மிக மன்னி ⋆
நிலை ஆர நின்றான் தன் ⋆
நீள் கழலே அடை நெஞ்சே ! ‖ **6.9.8** ‖ 88

மறை ஆரும் பெரு வேள்விக் ⋆
கொழும் புகை போய் வளர்ந்து ⋆
எங்கும் நிறை ஆர வான் மூடும் ⋆
நீள் செல்வத் திருநறையூர் ⋆
பிறை ஆரும் சடையானும் ⋆
பிரமனும் முன் தொழுதேத்த ⋆

இறை ஆகி நின்றான் தன் ⋆
இணை அடியே அடை நெஞ்சே ! ॥ **6.9.9** ॥ 89

‡ திண் கனக மதிள் புடை சூழ் ⋆
திருநறையூர் நின்றானை ⋆
வண் களக நிலவெறிக்கும் ⋆
வயல் மங்கை நகராளன் ⋆
பண் கள் அகம் பயின்ற சீர்ப் ⋆
பாடல் இவை பத்தும் வல்லார் ⋆
விண் கள் அகத்திமையவர் ஆய் ⋆
வீற்றிருந்து வாழ்வாரே ॥ **6.9.10** ॥ 90

அடிவரவு — பெடை கழி சுளை துன்று அகில் பொன் சீர் குலை மறை திண் கிடந்த

பெடையடர்த்த முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 7.4 – கண்சோர

‡ கண் சோர வெம் குருதி வந்திழிய ⋆
வெம் தழல் போல் கூந்தலாளை ⋆
மண் சேர முலை உண்ட மா மதலாய் ! ⋆
வானவர் தம் கோவே ! என்று ⋆
விண் சேரும் இளந் திங்கள் அகடுரிஞ்சு ⋆
மணி மாட மல்கு ⋆ செல்வத் தண்
சேறை எம் பெருமான் தாள் தொழுவார் காண்மின் ⋆
என் தலை மேலாரே ‖ **7.4.1** ‖ 91

அம் புருவ வரி நெடுங்கண் ⋆
அலர் மகளை வரை அகலத்தமர்ந்து ⋆
மல்லல் கொம்புருவ விளங்கனி மேல் ⋆
இளங்கன்று கொண்டெறிந்த கூத்தர் போலாம் ⋆
வம்பலரும் தண் சோலை ⋆
வண் சேறை வான் உந்து கோயில் மேய ⋆
எம் பெருமான் தாள் தொழுவார் ⋆
எப்பொழுதும் என் மனத்தே இருக்கின்றாரே ‖ **7.4.2** ‖ 92

மீதோடி வாள் எயிறு மின் இலக ⋆
முன் விலகும் உருவினாளை ⋆
காதோடு கொடி மூக்கன்றுடன் அறுத்த ⋆
கைத் தலத்தா ! என்று நின்று ⋆
தாதோடு வண்டலம்பும் ⋆

தண் சேறை எம் பெருமான் தாளை ஏத்தி ⋆
போதோடு புனல் தூவும் புண்ணியரே ⋆
விண்ணவரின் பொலிகின்றாரே ॥ **7.4.3** ॥ 93

தேர் ஆளும் வாள் அரக்கன் ⋆
தென் இலங்கை வெஞ்சமத்துப் பொன்றி வீழ ⋆
போர் ஆளும் சிலை அதனால் ⋆
பொரு கணைகள் போக்குவித்தாய் ! என்று ⋆
நாளும் தார் ஆளும் வரை மார்பன் ⋆
தண் சேறை எம் பெருமான் உம்பர் ஆளும் ⋆
பேர் ஆளன் பேர் ஓதும் பெரியோரை ⋆
ஒரு காலும் பிரிகிலேனே ॥ **7.4.4** ॥ 94

வந்திக்கும் மற்றவர்க்கும் ⋆
மாசுடம்பில் வல் அமணர் தமக்கும் அல்லேன் ⋆
முந்திச் சென்றரி உருவாய் ⋆
இரணியனை முரண் அழித்த முதல்வர்க்கல்லால் ⋆
சந்தப் பூ மலர்ச் சோலை ⋆
தண் சேறை எம் பெருமான் தாளை ⋆
நாளும் சிந்திப்பார்க்கென் உள்ளம் தேன் ஊறி ⋆
எப்பொழுதும் தித்திக்குமே ॥ **7.4.5** ॥ 95

பண்டேனம் ஆய் உலகை அன்றிடந்த ⋆
பண்பாளா ! என்று நின்று ⋆
தொண்டானேன் திருவடியே துணை அல்லால் ⋆
துணை இலேன் சொல்லுகின்றேன் ⋆
வண்டேந்தும் மலர்ப் புறவில் ⋆
வண் சேறை எம் பெருமான் அடியார் தம்மை ⋆

கண்டேனுக்கிது காணீர் ⋆
என் நெஞ்சும் கண்ணிணையும் களிக்கும் ஆறே || **7.4.6** || 96

பை விரியும் வரி அரவில் ⋆
படு கடலுள் துயில் அமர்ந்த பண்பா ! என்றும் ⋆
மை விரியும் மணி வரை போல் ⋆
மாயவனே ! என்றென்றும் வண்டார் நீலம் ⋆
செய் விரியும் தண் சேறை எம் பெருமான் ⋆
திருவடியைச் சிந்தித்தேற்கு ⋆
என் ஐ அறிவும் கொண்டானுக்கு ⋆
ஆள் ஆனார்க் காளாம் என் அன்பு தானே || **7.4.7** || 97

உண்ணாது வெம் கூற்றம் ⋆
ஓவாத பாவங்கள் சேரா ⋆
மேலை விண்ணோரும் மண்ணோரும் வந்திறைஞ்சும் ⋆
மென் தளிர் போல் அடியினானை ⋆
பண்ணார வண்டியம்பும் பைம் பொழில் சூழ் ⋆
தண் சேறை அம்மான் தன்னை ⋆
கண்ணாரக் கண்டுருகி ⋆
கை ஆரத் தொழுவாரைக் கருதுங்காலே || **7.4.8** || 98

கள்ளத்தேன் பொய் அகத்தேன் ஆதலால் ⋆
போதொரு கால் கவலை என்னும் ⋆
வெள்ளத்தேற்கென் கொலோ ⋆
விளை வயலுள் கரு நீலம் களைஞர் தாளால் தள்ள ⋆
தேன் மண நாறும் ⋆
தண் சேறை எம் பெருமான் தாளை ⋆

நாளும் உள்ளத்தே வைப்பாருக்கிது காணீர் ⋆
என் உள்ளம் உருகும் ஆறே ‖ **7.4.9** ‖ 99

‡ பூ மாண் சேர் கருங்குழலார் போல் நடந்து ⋆
வயல் நின்ற பெடையோடு ⋆
அன்னம் தேமாவின் இன் இழலில் கண் துயிலும் ⋆
தண் சேறை அம்மான் தன்னை ⋆
வா மான் தேர்ப் பரகாலன் ⋆
கலிகன்றி ஒலி மாலை கொண்டு தொண்டீர் ⋆
தூ மான் சேர் பொன் அடிமேல் சூட்டுமின் ⋆
நும் துணைக் கையால் தொழுது நின்றே ‖ **7.4.10** ‖ 100

அடிவரவு — கண் அம்பு மீதோடி தேராளும் வந்திக்கும் பண்டு பைவிரியும் உண்ணாது கள்ளத்தேன் பூமாண் தந்தை

கண்சோர முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 8.2 – தெள்ளியீர்

‡ தெள்ளியீர் ! ⋆
தேவர்க்கும் தேவர் திருத் தக்கீர் ! ⋆
வெள்ளியீர் ⋆
வெய்ய விழு நிதி வண்ணர் ⋆
ஓ ! துள்ளு நீர்க் ⋆
கண்ணபுரம் தொழுதாள் இவள் கள்வியோ ⋆
கைவளை கொள்வது தக்கதே ‖ **8.2.1** ‖ 101

நீணிலா முற்றத்து ⋆
நின்றிவள் நோக்கினாள் ⋆
காணுமோ ! ⋆
கண்ணபுரம் என்று காட்டினாள் ⋆
பாணனார் திண்ணம் இருக்க ⋆
இனி இவள் நாணுமோ ⋆
நன்று நன்று நறையூரர்க்கே ‖ **8.2.2** ‖ 102

‡ அருவி சோர் வேங்கடம் ⋆
நீர் மலை என்று வாய் வெருவினாள் ⋆
மெய்யம் வினவி இருக்கின்றாள் ⋆
பெருகு சீர்க் ⋆
கண்ணபுரம் என்று பேசினாள் உருகினாள் ⋆
உள் மெலிந்தாள் ⋆
இது என் கொலோ ‖ **8.2.3** ‖ 103

உண்ணும் நாள் இல்லை ⋆
உறக்கமும் தான் இல்லை ⋆
பெண்மையும் சால ⋆
நிறைந்திலள் பேதை தான் ⋆
கண்ணனூர் கண்ணபுரம் தொழும் ⋆
கார்க் கடல் வண்ணர் மேல் ⋆
எண்ணம் இவட்கு ⋆
இது என் கொலோ ‖ **8.2.4** ‖ 104

கண்ணனூர் ⋆
கண்ணபுரம் தொழும் காரிகை ⋆
பெண்மையும் தன்னுடை ⋆
உண்மை உரைக்கின்றாள் ⋆
வெண்ணெ உண்டாப்புண்ட ⋆
வண்ணம் விளம்பினாள் ⋆
வண்ணமும் ⋆
பொன் நிறம் ஆவதொழியுமே ‖ **8.2.5** ‖ 105

வட வரை நின்றும் வந்து ⋆
இன்று கணபுரம் ⋆
இடவகை கொள்வது ⋆
யாம் என்று பேசினாள் ⋆
மடவரல் மாதர் என் பேதை ⋆
இவர்க்கிவள் கடவதென் ⋆
கண் துயில் ⋆
இன்றிவர் கொள்ளவே ‖ **8.2.6** ‖ 106

தரங்க நீர் பேசினும் ⋆
தண் மதி காயினும் ⋆
இரங்குமோ ⋆
எத்தனை நாள் இருந்தெள்கினாள் ⋆
துரங்கம் வாய் கீண்டுகந்தான் அது ⋆
தொன்மை ஊர் ⋆
அரங்கமே என்பது ⋆
இவள் தனக்காசையே ‖ **8.2.7** ‖ 107

தொண்டெல்லாம் நின் அடியே ⋆
தொழுதுய்யுமா கண்டு ⋆
தான் கணபுரம் ⋆
தொழப் போயினாள் ⋆
வண்டுலாம் கோதை என் பேதை ⋆
மணி நிறம் கொண்டு தான் ⋆
கோ இன்மை செய்வது தக்கதே ‖ **8.2.8** ‖ 108

முள் எயிறேய்ந்தில ⋆
கூழை முடி கொடா ⋆
தெள்ளியள் என்பதோர் ⋆
தேசிலள் என் செய்கேன் ⋆
கள் அவிழ் சோலைக் ⋆
கணபுரம் கை தொழும் பிள்ளையை ⋆
பிள்ளை என்றெண்ணப் பெறுவரே ‖ **8.2.9** ‖ 109

‡ கார்மலி ⋆
கண்ணபுரத்தெம் அடிகளை ⋆
பார் மலி மங்கையர் கோன் ⋆

பரகாலன் சொல் ⋆
சீர் மலி பாடல் ⋆
இவை பத்தும் வல்லவர் ⋆
நீர் மலி வையத்து ⋆
நீடு நிற்பார்களே ॥ **8.2.10** ॥ 110

அடிவரவு — தெள்ளியீர் நீணிலா அருவி உண்ணும் கண்ணன் வடவரை தரங்கம் தொண்டு முள் கார் கரை

தெள்ளியீர் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 9.9 – மூவரில்

‡ மூவரில் முன் முதல்வன் ⋆
முழங்கார் கடலுள் கிடந்து ⋆
பூவலர் உந்தி தன்னுள் ⋆
புவனம் படைத்துண்டுமிழ்ந்த ⋆
தேவர்கள் நாயகனை ⋆
திருமாலிருஞ்சோலை நின்ற ⋆
கோவலர் கோவிந்தனைக் ⋆
கொடியேர் இடை கூடுங்கொலோ ‖ **9.9.1** ‖ 111

‡ புனை வளர் பூம் பொழில் ஆர் ⋆
பொன்னி சூழ் அரங்க நகருள் முனைவனை ⋆
மூவுலகும் படைத்த ⋆
முதல் மூர்த்தி தன்னை ⋆
சினை வளர் பூம் பொழில் சூழ் ⋆
திருமாலிருஞ்சோலை நின்றான் ⋆
கனை கழல் காணுங்கொலோ ⋆
கயற் கண்ணி எம் காரிகையே ‖ **9.9.2** ‖ 112

உண்டுலகேழினையும் ⋆
ஒரு பாலகன் ஆல் இலை மேல் ⋆
கண் துயில் கொண்டுகந்த ⋆
கரு மாணிக்க மா மலையை ⋆
திண் திறல் மாகரி சேர் ⋆

திருமாலிருஞ்சோலை நின்ற ⋆
அண்டர் தம் கோவினை ⋆
இன்று அணுகுங்கொல் என் ஆய் இழையே ‖ **9.9.3** ‖ 113

சிங்கம் அதாய் அவுணன் ⋆
திறல் ஆகம் முன் கீண்டுகந்த ⋆
பங்கய மா மலர்க் கண் ⋆
பரனை எம் பரஞ்சுடரை ⋆
திங்கள் நன் மா முகில் சேர் ⋆
திருமாலிருஞ்சோலை நின்ற ⋆
நங்கள் பிரானை ⋆
இன்று நணுகுங்கொல் என் நன்னுதலே ‖ **9.9.4** ‖ 114

தானவன் வேள்வி தன்னில் ⋆
தனியே குறளாய் நிமிர்ந்து ⋆
வானமும் மண்ணகமும் ⋆
அளந்த திரிவிக்கிரமன் ⋆
தேன் அமர் பூம் பொழில் சூழ் ⋆
திருமாலிருஞ்சோலை நின்ற ⋆
வானவர் கோனை ⋆
இன்று வணங்கித் தொழ வல்லள் கொலோ ‖ **9.9.5** ‖ 115

‡ நேசம் இலாதவர்க்கும் ⋆
நினையாதவர்க்கும் அரியான் ⋆
வாச மலர்ப் பொழில் சூழ் ⋆
வட மா மதுரைப் பிறந்தான் ⋆
தேசம் எல்லாம் வணங்கும் ⋆
திருமாலிருஞ்சோலை நின்ற ⋆

கேசவ நம்பி தன்னைக் ⋆
கெண்டை ஒண் கண்ணி காணுங்கொலோ ‖ **9.9.6** ‖ 116

புள்ளினை வாய் பிளந்து ⋆
பொரு மா கரி கொம்பொசித்து ⋆
கள்ளச் சகடுதைத்த ⋆
கரு மாணிக்க மா மலையை ⋆
தெள் அருவி கொழிக்கும் ⋆
திருமாலிருஞ்சோலை நின்ற ⋆
வள்ளலை வாள் நுதலாள் ⋆
வணங்கித் தொழ வல்லள் கொலோ ‖ **9.9.7** ‖ 117

பார்த்தனுக்கன்றருளிப் ⋆
பாரதத்தொரு தேர் முன் நின்று ⋆
காத்தவன் தன்னை ⋆
விண்ணோர் கரு மாணிக்க மா மலையை ⋆
தீர்த்தனைப் பூம் பொழில் சூழ் ⋆
திருமாலிருஞ்சோலை நின்ற ⋆
மூர்த்தியைக் கை தொழவும் ⋆
முடியுங்கொல் என் மொய் குழற்கே ‖ **9.9.8** ‖ 118

‡ வலம்புரி ஆழியனை ⋆
வரை ஆர் திரள் தோளன் தன்னை ⋆
புலம்புரி நூலவனைப் ⋆
பொழில் வேங்கட வேதியனை ⋆
சிலம்பியல் ஆறுடைய ⋆
திருமாலிருஞ்சோலை நின்ற ⋆

நலந் திகழ் நாரணனை ⋆
நணுகுங்கொல் என் நல் நுதலே ॥ **9.9.9** ॥ 119

‡ தேடற்கரியவனைத் ⋆
திருமாலிருஞ்சோலை நின்ற ⋆
ஆடல் பறவையனை ⋆
அணி ஆய் இழை காணும் என்று ⋆
மாடக் கொடி மதிள் சூழ் ⋆
மங்கையார் கலிகன்றி சொன்ன ⋆
பாடல் பனுவல் பத்தும் ⋆
பயில்வார்க்கில்லை பாவங்களே ॥ **9.9.10** ॥ 120

அடிவரவு — மூவர் புனை உண்டு சிங்கமது தானவன் நேசம் புள்ளினை பார்த்தனுக்கு வலம்புரி தேடற்கு எங்கள்

மூவரில் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 10.8 – காதில் கடிப்பு

‡ காதில் கடிப்பிட்டுக் ⋆
கலிங்கம் உடுத்து ⋆
தாது நல்ல ⋆
தண்ணந் துழாய் கொடணிந்து ⋆
போது மறுத்துப் ⋆
புறமே வந்து நின்றீர் ⋆
ஏதுக்கிது என் ⋆
இது என் இது என்னோ ‖ **10.8.1** ‖ 121

துவர் ஆடை உடுத்து ⋆
ஒரு செண்டு சிலுப்பி ⋆
கவர் ஆக முடித்துக் ⋆
கலிக் கச்சுக் கட்டி ⋆
சுவர் ஆர் கதவின் புறமே ⋆
வந்து நின்றீர் ⋆
இவர் ஆர் இது என் ⋆
இது என் இது என்னோ ‖ **10.8.2** ‖ 122

கருளக் கொடி ஒன்றுடையீர் ! ⋆
தனிப் பாகீர் ⋆
உருளச் சகடம் அது ⋆
உறக்கில் நிமிர்த்தீர் ⋆
மருளைக் கொடு பாடி வந்து ⋆

இல்லம் புகுந்தீர் ⋆
இருளத்திது என் ⋆
இது என் இது என்னோ ‖ **10.8.3** ‖ 123

நாமம் பலவும் உடை ⋆
நாரண நம்பீ ⋆
தாமத் துளபம் ⋆
மிக நாறிடுகின்றீர் ⋆
காமன் எனப் பாடி வந்து ⋆
இல்லம் புகுந்தீர் ⋆
ஏமத்திது என் ⋆
இது என் இது என்னோ ‖ **10.8.4** ‖ 124

சுற்றும் குழல் தாழச் ⋆
சுரிகை அணைத்து ⋆
மற்றும் பல ⋆
மா மணி பொன் கொடணிந்து ⋆
முற்றம் புகுந்து ⋆
முறுவல் செய்து நின்றீர் ⋆
எற்றுக்கிது என் ⋆
இது என் இது என்னோ ‖ **10.8.5** ‖ 125

ஆன் ஆயரும் ⋆
ஆ நிரையும் அங்கொழியக் ⋆
கூன் ஆயதோர் ⋆
கொற்ற வில்லொன்று கை ஏந்திப் ⋆
போனார் இருந்தாரையும் ⋆
பார்த்துப் புகுதீர் ⋆

ஏனோர்கள் முன் என் ⋆
இது என் இது என்னோ ‖ **10.8.6** ‖ 126

மல்லே பொருத திரள் தோள் ⋆
மணவாளீர் ⋆
அல்லே அறிந்தோம் ⋆
நும் மனத்தின் கருத்தை ⋆
சொல்லாதொழியீர் ⋆
சொன்ன போதினால் வாரீர் ⋆
எல்லே இது என் ⋆
இது என் இது என்னோ ‖ **10.8.7** ‖ 127

புக்காடரவம் ⋆
பிடித்தாட்டும் புனிதீர் ⋆
இக்காலங்கள் ⋆
யாம் உமக்கேதொன்றும் அல்லோம் ⋆
தக்கார் பலர் ⋆
தேவிமார் சால உடையீர் ⋆
எக்கே ! இது என் ⋆
இது என் இது என்னோ ‖ **10.8.8** ‖ 128

ஆடி அசைந்து ⋆
ஆய் மடவாரொடு நீ போய் ⋆
கூடிக் குரவை பிணை ⋆
கோமளப் பிள்ளாய் ⋆
தேடித் திரு மா மகள் ⋆
மண் மகள் நிற்ப ⋆

ஏடி ! இது என் ⋆
இது என் இது என்னோ ॥ **10.8.9** ॥ 129

‡ அல்லிக் கமலக் கண்ணனை ⋆
அங்கோர் ஆய்ச்சி ⋆
எல்லிப் பொழுதூடிய ⋆
ஊடல் திறத்தை ⋆
கல்லின் மலி தோள் ⋆
கலியன் சொன்ன மாலை ⋆
சொல்லித் துதிப்பார் அவர் ⋆
துக்கம் இலரே ॥ **10.8.10** ॥ 130

அடிவரவு — காதில் துவர் கருளக்கொடி நாமம் சுற்றும் ஆனாயர் மல்லே புக்கு ஆடி அல்லி புள்ளுரு

காதில் கடிப்பு முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 11.8 – மாற்றமுள

‡ மாற்றம் உள ⋆
ஆகிலும் சொல்லுவன் ⋆
மக்கள் தோற்றக் குழி ⋆
தோற்றுவிப்பாய் கொல் என்றின்னம் ⋆
ஆற்றங்கரை வாழ் மரம் போல் ⋆
அஞ்சுகின்றேன் ⋆
நாற்றச் சுவை ⋆
ஊறொலி ஆகிய நம்பீ ! ॥ **11.8.1** ॥ 131

சீற்றம் உள ⋆
ஆகிலும் செப்புவன் ⋆
மக்கள் தோற்றக் குழி ⋆
தோற்றுவிப்பாய் கொல் என்றஞ்சி ⋆
காற்றத்திடைப்பட்ட ⋆
கலவர் மனம் போல ⋆
ஆற்றத் துளங்கா நிற்பன் ⋆
ஆழி வலவா ! ॥ **11.8.2** ॥ 132

தூங்கார் பிறவிக்கள் ⋆
இன்னம் புகப் பெய்து ⋆
வாங்காய் என்று சிந்தித்து ⋆
நான் அதற்கஞ்சி ⋆
பாம்போடொரு கூரையிலே ⋆

பயின்றாற் போல் ⋆
தாங்காதுள்ளம் தள்ளும் ⋆
என் தாமரைக் கண்ணா ! ‖ **11.8.3** ‖ 133

உருவார் பிறவிக்கள் ⋆
இன்னம் புகப் பெய்து ⋆
திரிவாய் என்று சிந்தித்தி ⋆
என்றதற்கஞ்சி ⋆
இருபாடெரி கொள்ளியின் ⋆
உள் எறும்பே போல் ⋆
உருகா நிற்கும் என் உள்ளம் ⋆
ஊழி முதல்வா ! ‖ **11.8.4** ‖ 134

கொள்ளக் குறையாத ⋆
இடும்பைக் குழியில் ⋆
தள்ளி புகப் பெய்தி கொல் ⋆
என்றதற்கஞ்சி ⋆
வெள்ளத்திடைப்பட்ட ⋆
நரி இனம் போலே ⋆
உள்ளம் துளங்கா நிற்பன் ⋆
ஊழி முதல்வா ! ‖ **11.8.5** ‖ 135

படை நின்ற ⋆
பைந் தாமரையோடு ⋆
அணி நீலம் மடை நின்றலரும் ⋆
வயலாலி மணாளா ⋆
இடையன் எறிந்த மரமே ⋆
ஒத்திராமே ⋆

அடைய அருளாய் ⋆
எனக்குந்தன் அருளே ॥ **11.8.6** ॥ 136

‡ வேம்பின் புழு ⋆
வேம்பன்றி உண்ணாது ⋆
அடியேன் நான் பின்னும் ⋆
உன் சேவடி அன்றி நயவேன் ⋆
தேம்பல் இளந் திங்கள் ⋆
சிறை விடுத்து ⋆
ஐவாய்ப் பாம்பின் அணைப் ⋆
பள்ளி கொண்டாய் பரஞ்சோதீ ! ॥ **11.8.7** ॥ 137

‡ அணியார் பொழில் சூழ் ⋆
அரங்க நகர் அப்பா ⋆
துணியேன் இனி ⋆
நின் அருள் அல்லதெனக்கு ⋆
மணியே ! மணி மாணிக்கமே ! ⋆
மதுசூதா ⋆
பணியாய் எனக்குய்யும் வகை ⋆
பரஞ்சோதீ ! ॥ **11.8.8** ॥ 138

‡ நந்தா நரகத்து ⋆
அழுந்தா வகை ⋆
நாளும் எந்தாய் ! தொண்டர் ஆனவர்க்கு ⋆
இன் அருள் செய்வாய் ⋆
சந்தோகா ! தலைவனே ! ⋆
தாமரைக் கண்ணா ⋆

அந்தோ ! அடியேற்கு ⋆
அருளாய் உன் அருளே ॥ **11.8.9** ॥ 139

‡ குன்றம் எடுத்து ⋆
ஆனிரை காத்தவன் தன்னை ⋆
மன்றில் புகழ் ⋆
மங்கை மன் கலிகன்றி சொல் ⋆
ஒன்று நின்ற ஒன்பதும் ⋆
வல்லவர் தம்மேல் ⋆
என்றும் வினை ஆயின ⋆
சாரகில்லாவே ॥ **11.8.10** ॥ 140

அடிவரவு — மாற்றம் சீற்றம் தூங்கார் உருவார் கொள்ள படை வேம்பின் அணியார் நந்தா குன்றம் நிதியினை

மாற்றமுள முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்